DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -23

| | | |
|---|---|---|
| Name | : பழனிசாமி | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 30th day of January 2025.

A1 and A3 to A6 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வீரபாண்டி சேலத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இறந்துபோன விஜயனை தெரியும். 1வது எதிரி மற்றும் 5வது எதிரியையும் எனக்கு தெரியும். சுமார் 10வருடத்திற்கு முன்பு காலை 7.00 , 7.30 மணிக்கு என் தோட்டத்தில் தான் விஜயன் கிடந்தார். நான் கேள்விபட்டு விஜயன்கிடந்த இடத்திற்கு சென்றேன். ஏற்கவே 10, 20 பேர் அங்கு இருந்தார்கள். பின்பு ½ மணி நேரம் கழித்து போலிசார் வந்தர்கள். விஜயன் கவிழ்ந்த நிலையில் கிடந்தார். உயிர் இல்லை.

போலிசார் விசாரித்தார்கள். வயல் என்னுடையது தான் என்று சொன்னேன். போலிசார் எழுதிகொண்டு கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டுகொடுத்தேன். மறுபடியும் நான் சாப்பிட்டுவிட்டு வந்தேன். பின்பு நாய் வந்தது. நாய் வண்டிக்கு அருகில் போய் நின்றுகொண்டது. அதன்பிறகு போலிசார் சடலத்தை எடுத்து சென்றார்கள். நான் வீட்டிற்கு போய்விட்டேன். எனக்கு வேறு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

போலிசார் என்னை விசாரித்தபோது சுந்தரமூர்த்தி நிலத்திற்கு அருகிலுள்ள நிலத்தை சுந்திரமூர்த்தி வாங்கி விட்டார் என்றும், அந்த நிலத்தை விஜயன் அதே விலைக்கு கேட்டார் என்றும், நிலத்தை கொடுக்கததால் சுந்திரமூர்த்திக்கும், விஜயனுக்கும்விரேதம் ஏற்பட்டது என்று சொன்னேன் என்றால் சரியல்ல. சுந்தரமூர்த்தியின் தங்கை அவரது பெற்றோர் சொத்தில் 1/3 பாகத்தை விஜயனுக்கு எழுதிவைத்துவிட்டார் என்று புலன்விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனாலும் சுந்திரமூர்த்திக்கும், விஜயனுக்கும் பகை ஏற்பட்டு சுந்திரமூர்த்தி போலிசில் புகார் கொடுத்தார் என்று நான் புலன்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விஜயனை சுந்தரமூர்த்தி தான் கொலை செய்தார் என்ற விவரத்தை நான் தெரிந்துகொண்டதாக புலன்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில்மேற்படி உண்மைகளை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் உண்மைகளை மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எதிரி அருண்குமாரை போலிசார் என்னை காவல்நிலையத்தில் விசாரித்தபோது சுமார் 10 நாட்கள் காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- L. Kalaivani,

III Additional District Judge,

Salem.